


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.7.2025) தலைமைச் செயலகத்தில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை சார்பில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் தட்டச்சர் உள்ளிட்ட பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 40 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ். விசாகன், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் திருமதி. சீமா அகர்வால், , காவல்துறை இயக்குநர் (தலைமையிடம்) வினீத் தேவ் வான்கடே, , தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் சைலேஷ் குமார் யாதவ், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநர் முனைவர் மகேஷ்வர் தயாள், தாம்பரம் காவல் ஆணையர் அபின் தினேஷ் மோதக், சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ. அருண், தடய அறிவியல் துறை இயக்குநர் முனைவர் சிவப்பிரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.07.2025) தலைமைச் செயலகத்தில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை சார்பில் 27 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 மாநிலவரி அலுவலகக் கட்டடங்கள் மற்றும் 12 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்தில் திருப்போரூர் சார்பதிவாளர் அலுவலகத்தினை பிரித்து புதியதாக உருவாக்கப்பட்டுள்ள நாவலூர் மற்றும் கேளம்பாக்கம் ஆகிய இரண்டு புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வணிகவரி ஆணையர் எஸ்.நாகராஜன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.7.2025) தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயின்று, 2025–26 ஆம் கல்வி ஆண்டில் புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனங்களான இந்திய தொழில்நுட்ப கழகம், ஒன்றிய பல்கலைக்கழகங்கள், தேசிய ஃபேஷன் தொழில்நுட்ப நிறுவனம், தேசிய சட்டப் பல்கலைக்கழகம், Miranda House, University of Delhi போன்றவற்றில் சேர்க்கை பெற்ற 136 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நல ஆணையர் த.ஆனந்த், பழங்குடியினர் நல இயக்குநர் எஸ். அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.7.2025) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் வடிவமைக்கப்பட்ட “தமிழ்நாடு மாநில திருநங்கையர் கொள்கை–2025”–யினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை கூடுதல் செயலாளர் திருமதி ச. வளர்மதி, சமூக நல இயக்குநர் திருமதி. மா.செள.சங்கீதா, மாநில திட்டக்குழு உறுப்பினர் முனைவர் நர்த்தகி நடராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (31.7.2025) தலைமைச் செயலகத்தில், தென்னிந்திய பகுதிகளின் படைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் கே.எஸ். பிரார் சந்தித்து பேசினார். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் உள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.7.2025) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திற்கு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக தேர்வு செய்யப்பட்ட 7 தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் 1 சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகியோருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு.பி.சந்தர மோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, மேலாண்மை இயக்குநர் மரு.மா.ஆர்த்தி, பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், உறுப்பினர் செயலர் முனைவர்.சி. உஷாராணி ஆகியோர் உடனிருந்தனர்.

## டிஜிட்டல் இந்தியா நிலப் பதிவுகள் நவீனமயமாக்கல் திட்டத்தின்

# செயல்பாடுகள் மற்றும் அதன் பலன்கள் என்ன?

## மக்களவையில் — தருமபுரி எம்.பி., ஆ.மணி கேள்வி!



புதுடெல்லி, ஆக. 2-

டிஜிட்டல் இந்தியா நிலப் பதிவுகள் நவீனமய மாக்கல் திட்டத்தை (DILRMP) செயல்படுத்துவ தில் மாநிலம், மாவட்டம் மற்றும் யூனியன் பிரதே சங்கள் வாரியாக விவரங் கள் என்ன?தமிழ் நாட் டில், குறிப்பாக தர்மபுரி மக்களவைத் தொகுதியில் பதிவுகள் டிஜிட்டல் மய மாக்கப்பட்ட கிராமங்கள் மற்றும் நிலப் பகுதிகளின் எண்ணிக்கை என்ன? DILRMP இன் கீழ் நிலப் பதி வுகளை டிஜிட்டல் மய மாக்குவது நிலத் தகராறு களைக் குறைக்க உதவி உள்ளதா? அப்படியா னால், மாநிலம், மாவட் டம் மற்றும் யூனியன் பிர தேசங்கள் வாரியாக தகராறுகளைக் குறைந்த தற்கான விவரங்கள் என்ன?டிஜிட்டல் மயமாக் கப்பட்ட நிலப் பதிவுக ளின் துல்லியம் மற்றும் நம் பகத்தன்மையை உறுதி செய்ய ஒன்றிய அரசு சார் பில் எடுக்கப்பட்ட நடவ டிக்கைகள் என்ன?

நாடு முழுவதும் DILRMP ஐ முடிப்பதற்கான ஒரு வரைபடத்தை இந்த அரசாங்கம் தயாரித்துள்ள தாஅப்படியானால்,அதற் கான காலக்கெடு மற்றும் மைல்கற்கள் விவரங்கள் என்ன ? என்று மக்களவை யில் ஊரக மேம்பாட்டு அமைச்சகத்தின் அமைச் சர் டாக்டர் சந்திரசேகர் பெம்மாசனியிடம் தரும புரி நாடாளுமன்ற உறுப்பி னர் வழக்கறிஞர்.ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.



நீலகிரி மாவட்டம், குன்னூர் சட்டமன்றத் தொகுதி – கோத்தகிரி நகராட்சி காந்தி மைதானத்தில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை, அரசு தலைமை கொறாடா கா.ராமச்சந்திரன் மற்றும் நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். உடன் மாவட்ட அவை தலைவர் போஜன், தலைமை பொதுக்குழ உறுப்பினர் வீரபத்திரன், கோத்தகிரி ஒன்றிய கழக செயலாளர் நெல்லை கண்ணன், கீழ் கோத்தகிரி ஒன்றிய கழக செயலாளர் பீமன், கோத்தகிரி நகர்மன்ற தலைவர் திருமதி ஜெயகுமாரி, அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், முதலமைச்சர் அவர்கள், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு ஆகஸ்ட் மூன்றாவது வாரத்தில் வருகை புரிவதையொட்டி, முன்னேற்பாடு பணிகள் மற்றும் அரசின் முன்னோடி திட்டங்கள் மற்றும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், கிழக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன், மேற்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. உடன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை, மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொண்டனர் .